
SACRED HEART RESEARCH PUBLICATIONS

புதிய அவையம்



# சீவகனின் உளப்பாங்கும் துறவறமும்

**முதுமுனைவர் இரா.சங்கர் ,**
*உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை,*
*தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர், வேலூர்-635 601.*

**கட்டுரை பெறப்பட்டது:** *15.12.2016* **ஏற்கப்பட்டது:** *05.05.2017*

சமயங்கள் காலத்தைக் கடந்து நிற்கும் பல்வேறு நிலைப்பாட்டு பொருண்மைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றன. பொதுவாகச் சமயத்தின் அடிப்படையிலோ பண்பாட்டின் அடிப்படையிலோ இயற்கை வழிபாடாகச் சூரியன் இருந்திருக்கிறது. அதன் பின்னர் மனிதன் அவனுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் நிலைப்பொருட்கள் மீது பயம்கொண்டு அவற்றிற்குப் பலிகொடுத்து வணங்கும் நிலை ஏற்படலாயின. அதன் பல்வேறு வளர்ச்சி நிலை பின்னாளில் நாட்டை ஆட்சி புரிந்த மன்னன், கொடூரத் தன்மையுள்ள மனிதர்கள், செல்வந்தர் போன்றோரின் புதைகுழியில் , அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் அவர்களுக்கு உதவிய பணியாளர்களையும் சேர்த்துப் புதைக்கும் பழக்கம் தோன்றலாயின. அவ்வாறு புதைக்கப்பட்டவர்கள் தெய்வங்களாகவும் கருதப்பட்டனர். அத்தெய்வங்களுக்கு உயிர் பலி கொடுக்கும் வழக்கம் தோன்றலாயின. இவ்வாறு பழந்தமிழரின் தெய்வபலி, போர்க்கொலை, அகவாழ்வின் ஒழுங்கீனம், அவற்றால் ஏற்படும் இன்னல்கள் யாவற்றையும் களையும் நோக்கில் புற மாநிலத்துச் சமயங்கள் புகத்தொடங்கின. அவ்வாறு புகுந்த சமயங்களில் சமணமும் பௌத்தமும் இன்றளவும் பேசப்படுகின்றன. இச்சமயத்தவர்கள் தங்களின்

புதிய அவையம்

சமயத்தைப் பரப்பும் நோக்கில், ஏற்கனவே தமிழகத்தே நிலைபெற்றிருந்த காதல், வீரத் தமிழ் இலக்கியங்களையும் மொழியையும் கற்றுத் தேர்ந்து, அதன் வழி தமிழர்களுக்கு நிலையாமைக் கருத்தையும் அறக்கருத்தையும் இலக்கியங்கள் வாயிலாக உணர்த்தலாயினர். அதனடிப்படையில் தமிழுக்குப் புதுவகையான (அற இலக்கியங்கள்) இலக்கியங்களைத் தோற்றுவித்துத் தமிழ் மேலும் சிறப்புற்று வளரக் காரணமாகச் சமண சமயத்தவர்களும் பௌத்த சமயத்தவர்களும் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவ்விரு சமயங்களில் சமணர்கள் தமிழுக்குச் செய்த இலக்கியப் பணியையும் அவ்விலக்கியங்களில் ஒன்றான சீவகசிந்தாமணியில் சீவகனின் துறவறம் குறித்த உண்மைப்பொருளை வெளிப்படுத்தும் நோக்கில் " **சீவகனின் உளப்பாங்கும் துறவறமும்**" என்னும் பொருளில் இக்கட்டுரை அமைகிறது.

**<u>சமண சமயத்தின் பழமை</u>**

வரலாற்றுத் தொன்மை மிகுந்த சங்க காலத்தில் சமயப்பொறை தமிழ்நாட்டில் துலங்கியது என்பதற்குச் சங்க இலக்கியங்களில் சான்றுகள் இருந்தாலும்; 'கி.பி 776இல் நிர்வாண நிலை எய்திய பார்சுவநாதர்தான் அருக சமயத்தின் ஆதி முதல்வர் என்பர்'.[1] ஆயினும் வர்த்தமானர், பார்சுவநாதர் எனும் இப்பெரியார்களுக்கு முன்னரேயே இந்தியாவில் இருந்த பழஞ்சமயம் சமணம் என்பதற்குச் சான்றாக, 'யசுர்வேதத்தில் இடபதேவர், அரிட்டநேமி முதலான தீர்த்தங்கர்களின் பெயர்கள் காணப்படுவதால்'[2] இச்சமண சமயம் பழமையானது என்றும் சங்க இலக்கியத்தில் பேசப்படுகின்ற சமயப் பொறை இச்சமயத்தையும் குறிக்கும் என்பதை உணரமுடிகின்றது.மேலும் தொல்காப்பியர் காலத்தோடு ஒப்பிடுகையில் ,

**'அகத்தெழு வளியிசை அரில்தப நாடி**
**அளவிற் கோடல் அந்தணர் மறைத்தே'** [3] என்றும்

**'கபிலை கண்ணிய வேள்வி நிலை'**[4] என்றும்

வைதிகச் சமயக் கருத்துக்களே காணப்படுகின்றனவன்றிச் சமண சமயம் குறித்த செய்திகள் காணப்படாமையால், சமண சமயம் தொல்காப்பியர் காலத்திற்குப் பின்பும் சங்க இலக்கிய காலத்திற்கு முன்பும் தமிழகத்தில் பரவியதாக இருக்க

வேண்டுமெனக் கருத இடமளிக்கிறது. இது கால வளர்ச்சியில் கி.பி 2ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு பெரும் வளர்ச்சியுற்றது. இதற்கு இணையாகப் பௌத்தம் வளர்ந்து வரும் நிலையில் மகேந்திர வர்மன் '**மத்த விலாசம்**'- என்ற நாடகத்தை வடமொழியில் எழுதி பௌத்த சமயத்தை வலியழித்தான். அதன் பின்னர் சமணம் கி.பி 17ஆம் நூற்றாண்டு வரையில் தமிழுக்குப் பல அரிய நூல்களைத் தந்து தமிழ்த் தொண்டாற்றியது.

**சமணர் செய்த தமிழ்த் தொண்டு**

சமயத்தை வளர்க்கும் நோக்கில் தமிழைக் கற்றுத் தேர்ந்த சமணர்கள், கற்ற தமிழால் தமிழுக்குப் பல இலக்கண இலக்கியங்களைப் படைக்கலாயினர். பௌத்த சமயத்திற்கு எதிர்ப்பாக இலக்கியத்தைத் தோற்றுவித்ததன் அடிப்படையிலும் தொல்காப்பியத்தைக் கற்றவர்கள் அவற்றிலுள்ள எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி இலக்கணமெனத் தனித்தனி இலக்கணங்களைப் படைக்கலாயினர். அதன் வழி, பழமொழிநானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி, நாலடியார் போன்ற மருத்துவம் மற்றும் நீதி சார்ந்த நூல்களும்; மணிமேகலை, குண்டலகேசிக்கு எதிரான நீலகேசி, அஞ்சனகேசி, காலகேசி, பிங்கலகேசி போன்ற காப்பியங்களும்; அவிநயம், செயிற்றியம், தக்காணிகம், அணியியல், வாப்பியம், மொழிவரி, கடியநன்னியம், காக்கைப்பாடினியம், நத்தத்தம், நாலடி நானூறு, பல்காயம், பனம்பாரம், சிறுகாக்கைப்பாடினியம், சங்க யாப்பு, செய்யுளியல், செயல்முறை, பெரியபம்பம், மாபுராணம், யாப்பியல், நாலடி நாற்பது, யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, அகப்பொருள்விளக்கம், நன்னூல் போன்ற இலக்கண நூல்களையும்; இந்திரகாளியம், பரிமாணம், வெண்பாபாட்டியல், நவநீதப் பாட்டியல் போன்ற பாட்டியல் நூல்களையும்; இளைஞர்களுக்காக நரி விருத்தம், எலி விருத்தம், கிளிவிருத்தம் போன்ற விருத்த நூல்களையும்; பெருங்கதை, சூளாமணி, சீவகசிந்தாமணி போன்ற காப்பியங்களையும்; கி.பி 17ஆம் நூற்றாண்டுகளில் இளஞ்சிறார்களுக்கு முன்னாளில் வழங்கிய நெல்லிலக்க வாய்ப்பாடு, சிறுகுழி வாய்ப்பாடு, பெருக்கல் வாய்ப்பாடு, கீழ்வாய் இலக்கம் போன்ற இலக்கண, இலக்கிய நூல்களையும்; கலிங்கத்துப்பரணி, திருக்கலம்பகம்,

அவிரோதியார் திருநூற்றந்தாதி, மேருமந்திரபுராணம், சந்திபுராணம் போன்ற சிற்றிலக்கியம் மற்றும் புராணங்களைப் பாடித் தமிழை வளர்த்தார்கள் என்று கூறுவது மிகையாகாது. இவ்வாறு படைக்கப்பட்ட நூல்களுள் சீவகசிந்தாமணியில் சமணசமயத்தை வலியுறுத்தும் நோக்கில் அறக் கருத்துக்கள் பரவிக் கிடக்கின்றன. அவ்வறக் கருத்துக்களில் துறவறத்தை இறுதியாக்கி முற்றுப்பெறுகிறது இக்காப்பியம். அறங்களில் ஒன்றான துறவறத்தை வலியுறுத்துவதாகவே இது அமைந்துள்ளது.

## சீவகனும் உளப்பாங்கும்

சீவகசிந்தாமணியின் காப்பியத் தலைவனான சீவகன் பெண்களை வசப்படுத்துவதில் தன்னிகரற்றத் தலைவனாக விளங்குகிறான். ஆயகலைகளில் வல்லவனாக விளங்கி வீணை வெற்றியால் காந்தருவதத்தையையும் களிறுதரு புணர்ச்சியால் குணமாலையையும் பாம்பின் விடம் அகற்றிப் பதுமையையும் ஆண்மைச் சிறப்பால் (கேமசரியை) நாணச் செய்து கேமசரியையும் படைப்பயிற்சி அளித்த திறமைக்குப் பரிசிலாகக் கனகமாலையையும் தான் சிறிது நேரம் தங்கிய அளவில் எல்லையற்றப் பொருள்களை வாணிகம் செய்யும் வாய்ப்பு வழங்கியதன் நல்வினையால் விமலையையும் கிழவனுருவில் சென்று பாடலிசையால் மனம் கவர்ந்து சுரமஞ்சரியையும், திரிபின்றி அம்பெய்தி வீழ்த்திய வில் திறத்தால் இலக்கணையையுமென எட்டுப் பெண்களைத் திருமணம் முடிக்கும் சீவகன் எட்டுப் பெண்களுடனும் ஓரிரு மாதங்களே இல்லற வாழ்வில் இன்புற்றுப் பின் அவர்களைத் துறந்து போதலாகவே காப்பியப் பின்னல் அமைந்திருக்கின்றது.

பொதுவாகச் சீவகன் மணந்த எட்டுப் பெண்களையும் விட்டு வேற்றுத் தேசத்தித்திற்குச் செல்வது குறித்த செய்தியாக 'அவன் பல நாடுகளுக்குச் சென்று பல்வேறுபட்ட மக்களின் நிலையை உணர்கிறான்' என்று கூறுவதாகக் கதை அமைவுகள் இருந்தாலும் சமணசமயக் கோட்பாடுகளில் ஒன்றான பெண்ணாசையைத் தவிர்த்தலாகத்தான் உணர்த்தப்படுகிறது. அத்துடன் சச்சந்தன் தன் மனைவி விசையை மீது மாளாத காதல் கொண்டு, நாட்டின் தலைவன் என்ற நினைப்பொழிந்து காம இச்சையில் காலம் தள்ளியதாலும்; தமிழர்களின் கொள்கையில் ஒன்றான

*மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழியே என்ற ‘மன்னன் வழித்தே மலர்தலை உலகம்’ என்ற கூற்றிற்கு இணங்கச் சச்சந்தன் வாழவில்லை என்பதனாலும்; அவன் தன் நாட்டையும் மனைவி, மக்களையும் (பெண்ணாசையால்) இழந்தான் என்பதை உணர்த்துகிறது.*

*இதன்வழி பெண்ணாசையை முற்றிலுமாகத் தவிர்த்தல் நன்று என்பதைக் காப்பியம் முழுவதுமாக உணர்த்தப்படுகிறது . இருப்பினும், சீவகன் எட்டுப் பெண்களை மணம் முடிக்கும் செய்தி ஆணின் ஆளுமையையும் பெண்ணின் அடக்குமையையும்(அடங்குதல்) வெளிக்காட்டுகிறது . ஒரே ஒரு பெண்ணின் மீது காதல் கொண்டு, அவளை மணமுடித்து, அப்பெண் போகத்திலேயே நாட்டை இழந்தவனுக்கு(சச்சந்தன்) மகனாகப் பிறந்தாலும்; எட்டுப் பெண்களின் போக மயக்கத்தில் திளைத்துத் தன் தந்தை இழந்த நாட்டை மீட்டான் என்பதிலிருந்து தன் தந்தையின் பெண்ணாசைத் தவறு சீவகனின் ஆழ்மனதில் பதிந்திருந்தது. அத்துடன் காப்பியப் பிற்பகுதியில் அருக தேவனின் கோவிலுக்குச் செல்லுகையில் அங்குள்ள துறவிகள் உலக நிலையாமைக் கருத்துகளை உணர்த்தலாயினர். இவ்வுலகத்தில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தவன் அந்நிலை மாறினால் அவன் நிலை மிகவும் மோசமானதாக மாறிவிடுவதாக,*

**‘வண்ணத்**
**துகிலுடுப்பின் வாய்விட்டு**
**அழுவதுபோல்**
**வருந்து மல்கு**
**னண்ணாச்**
**சிறுகூறை பாகமோர்**
**கைபாக முடுத்து**
**நாளு**
**மண்ணந் தடகுநீர்**
**யாந்தோ**
**வினையேயன்**
**றழுவாட் கண்டு**
**நண்ணன்மின்**
**செல்வ நமரங்கா**
**ணல்லறமே**
**நினைமின் கண்டீர்’**[5]

*என்ற செல்வம் நிலையாமையையும்; உலக இன்பத்தில் தவமே சிறந்தது என்று*

**‘முல்லை**
**முகைசொரிந்தாற்**
**போன்றினிய பாலடிகின்**
**மகளி ரேந்த**

***நல்ல கருணையா***
***னாள்வாயும்***
***பொற்கலத்து***
***நயந்துண் டார்கள்***
***அல்ல லடைய வடகிடுமி***
***னோட்டகத்தென்***
***றயில்வார்க் கண்டுஞ்***
***செல்வ நமரங்கா***
***ணினையன்மின்***
***செய்தவமே***
***நினைமின் கண்டீர்’[6]***

*என்ற தவச் சிறப்பையும்;*

*பெண்களின் மீது போகம் கொண்டு வாழ்ந்தவனுக்கு இளமை நிலையாமையை*

***‘மைதிரண்ட***
***வார்குழன்மேல்***
***வண்டார்ப்ப***
***மல்லிகைமென்***
***மாலை சூடிக்***
***கைதிரண்ட***
***வேலேந்திக் காமன்போற்***
***காரிகையார் மருளர்***
***சென்ற***
***ரைதிறண்டு***
***கண்டங் குரைப்பவோர்***
***தண்டூன்றி யறிவிற்***
***றள்ளி***
***நெய்திரண்டாற்***
***போலுமிழந்து நிற்கு***
***மிளமையோ***
***நிலையா தேகாண்’[7]***

*என்ற இளமை நிலையாமையை உணர்த்துகின்றபொழுது இயல்பாகவே உலகப் பற்றுக்களைத் துறந்து பல்வேறு திறத்து மக்களின் நிலையை உணர வேண்டும் என்ற எண்ணம் கொண்டவனுக்கு முக்தியின் இறுதிகட்ட நிலையை அடைந்ததாக அவனது மனநிலை அமைகிறது.*

***<u>விசையையின் துறவறமும் சீவகன் மனநிலையும்</u>***

*சீவகனின் தாயார் உலக இன்பங்கள் பொய்யானது என்று கூறித் தான் துறவறம் பூணுவதாகக் கூறுகையில்,* ***“சச்சந்தன் தன் கழிகாமத்தாற் கேடுற்றான்; நீ அவனைப் போலன்றித் தீநெறி கடிந்து நன்னெறிச் சென்றுயர்வாயாக”*** *என்று விசையை வாழ்த்துகையில் சீவகனின் மனம் மேலும் துறவின் மேல் நாட்டம் கொண்டது.*

***<u>துறவின் விளிம்பில் சீவகன்</u>***

*ஒரு சமயம் கானகம் சென்றிருந்த சீவகன், அங்கே கடுவனொன்று தன் துணைமந்தியின் மீது காதல் மயக்குற்று, அம்மயக்க இன்பத்தை அனுபவிக்கும்*

பொருட்டு ஒரு வேர்ப்பலாவைப் பறித்துக்கொண்டு சென்றதைக் கண்டான், அக்கடுவனிடமிருந்து அப்பலாவை அவ்வழியே வந்தவன் பறித்துக்கொண்டதையும் கண்டான். இவ்விரண்டு சம்பவங்களைக் கண்ட சீவகன் ‘மெலியோரை வலியோர் நலிந்திடலே இவ்வுலகத்து இயற்கை’ என்று இவ்வுலகின்கண் பிறத்தல் இழிவானது என உணரலாயினான். மேலும், கைப்பழம் இழந்த கடுவனைப் போலே நம் தந்தை கட்டியங்காரனுக்கும் கட்டியங்காரன் நமக்கும் என்று கருதி, நானும் கடுவனிடமிருந்து பழத்தைப் பறித்தவனுக்கு ஒப்பானவனாகவே ஆனேன் என்று கூறியும் நரக கதிக்கு உண்டான காரணத்தையும், விலங்கு பிறப்பில் உள்ள இன்னல்களையும் மக்கள் பிறப்பில் உள்ள இன்னல்களையும் அறிந்து உலக வாழ்க்கையே ஊழ்வினைப் பயன் தான் என்பதனை உணர்ந்து உலக இன்பத்தை விடுத்துத் துறவறம் பூண்டான்.

**சீவகனின் துறவு**

உலகைத் துறந்து தனிமையில் பயணித்த சீவகனிடம் வழிப்போக்கன் ஒருவன் உமக்கு எத்தனை மனைவிமார்கள், எத்தனைப் பிள்ளைகள் என்று கேட்கையில், “தானம், சீலம், தவம், அறிவர் சிறப்பை அறிந்தவர்கள்”[8] என்ற நால்வரும் மனைவிமார்கள் என்றும் அதன் வழியாக ஏற்படும் ஒழுக்கமே பிள்ளை என்று கூறுவதிலிருந்து சீவகன் முற்றாகத் துறவறத்தை ஏற்றுக் கொண்டதாக அறிய முடிகிறது.

**முடிவுரை**

இதுவரையில் உணர்த்திய செய்தியில் இருந்து நாம் அறிவது, ஒரு பெண்ணின்பத்தில் திளைத்து நாட்டை இழந்தவன் சச்சந்தன்; எட்டுப் பெண்களின் இன்பத்தை அனுபவித்துத் தன் தந்தை இழந்த நாட்டை மீட்டவன் சீவகன். இவன் எட்டுப் பெண்களை மணம் முடித்ததும், உலக வாழ்க்கையில் தன் தந்தையைப் போல் இல்லாமல் வெற்றி கண்டதும், தந்தைக்கு மகன் சொன்ன பாடமாகவும் இவனின் ஆண்மைச்செருக்கை வெளிப்படுத்துவதாகவும், உலக மக்களுக்குப் பெண்களால் விளையும் தீமையையும் அவற்றை வெற்றி காணும் வழியையும் எடுத்துச் சொல்வதாகவுமே இருக்கிறது. மேலும், உலக உயிர்களின் இன்னல்களைக் கண்ணுற்றதும்; தன் தாயாரின் துறவும்; இளமை, செல்வம் யாவையும் நிலையற்றது என்று உணர்ந்த மனம்,

*தானம், சீலம், தவம், அறிவர்சிறப்பு இவற்றையே நாடி உலக நிலையாமையைப் பொதுமையாக்கிச் சீவகனைத் துறவுறச் செய்கிறது. பொதுவாகச் சமணர்கள் தங்களின் மதக்கருத்துகளை வெளிப்படுத்துவதற்குத் தமிழைக் கற்றிருந்தாலும் அதன்வழி அரியதோர் தொண்டாக உலகப் பொதுமைகள் பல தமிழுக்குத் தந்திருக்கின்றனர். அதனடிப்படையில் சீவகன் வழியில் சொல்லப்பட்ட துறவு உலகப்பொதுமையாகவே கருதப்படுகிறது.*

**<u>சான்றுகள்</u>**

***1.****டாக்டர் சி.பாலசுப்பிரமணியன் – இலக்கியக் காட்சிகள், பக்கம் : 73*

*2.டாக்டர் சி.பாலசுப்பிரமணியன் – இலக்கியக் காட்சிகள், பக்கம் : 73*

*3.இளம்பூரனார் உரை -தொல்காப்பியம் எழுத்து – 102-ஆம் நூற்பா*

*4. இளம்பூரனார் உரை _தொல்காப்பியம் பொருளதிகாரம் – 1039 –ஆம் நூற்பா*

*5. புலவர் அரசு -சீவகசிந்தாமணி (பாகம் -2) :2625*

*6. புலவர் அரசு -சீவகசிந்தாமணி (பாகம் -2) :2623*

*7.புலவர் அரசு -சீவகசிந்தாமணி (பாகம் -2) :2626*

*8. வித்துவான் துரை. இராசராம் - சீவகசிந் தாமணி :1545*